CWOP : 20/2024
நாள் : 09.01.2025
ம.சா. : 1
பெயர் : ராஜேஷ்குமார்

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணை அபிடவிட்டில் சொல்லியுள்ள விலாசத்தில் குடியிருந்துவருகிறேன். நான் B.A Economics, படித்திருக்கிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். வருமானத்திற்கு வேறு என்ன வேலை உள்ளது என்றால் ரியல் எஸ்டேட் தொழில் மட்டும் தான் செய்து வருகிறேன். எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாக திருமண தகவல் மையத்தில் நான் MA படித்திருப்பதாகவும் கௌரவ இன்ஸ்பெக்டர் வேலை செய்வதாக பதிவு செய்து ஜாதகத்தில் குறிப்பிட்டு அதை சொல்லித்தான் திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் மகன், என்னுடன் வளர வேண்டும் என்பதற்காக மனுத்தாக்கல் செய்துள்ளேன். என் மகனுக்கு என்ன வயதாகிறது என்றால் 14.03.2019 அன்று என் மகன் பிறந்தான். என் மகனுக்கு 6 வயதாகிறது. என் மகன் என்ன படிக்கிறார் எந்த பள்ளியில்படிக்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அது சம்பந்தமாக விசாரித்து தெரிந்து கொள்ள எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரி. எதிர்மனுதாரரை விட்டு பிரியவேண்டும் என்பதற்காக அவருக்கு எதிராக விவாகரத்து மனு மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த மனுவில் எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு உத்தரவாகியுள்ளது என்றால் சரி. அந்த உத்தரவுப்படி எதிர்மனுதாரருக்கு எவ்வளவு ஜீவனாம்சம் உத்தரவானது மகன் வேதவர்மனுக்கு எவ்வளவு ஜீவனாம்சம் உத்தரவானது என்றால் இருவருக்கும் சேர்த்து மாதம் ரூபாய்

7000 உத்தரவானது. அந்த ஜீவனாம்ச தொகையை மாதாமாதம் கொடுக்கமுடியாமல் அவ்வப்போது சேர்த்து வைத்து கொடுத்து வருகிறேன் என்றால் சரி. போதிய வருமானம் இல்லாததால் மாதாமாதம் ஜீவனாம்சம் கொடுக்க முடியவில்லை என்றால் சரி. இடைக்கால ஜீவனாம்ச தொகையை உயர்த்திக்கேட்டு எதிர்மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தது எனக்கு தெரியும் என்றால் சரி. அந்த மேல்முறையீட்டு உத்தரவில் வழக்கு செலவுத்தொகையாக ரூபாய் 20000 கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டதை இதுவரை கொடுக்கவில்லை என்றால் சரி. அந்த தொகையை கொடுக்கமுடியாததற்காக காரணம் எனக்கு பொருளாதார வசதி இல்லை என்பது தான் என்றால் சரி. எதிர்மனுதாரர் மயிலாடுதுறை JM – 1 நீதிமன்றத்தில் தொடர்ந்த DVC மனுவில் இழப்பீடு தொகை உத்தரவானது எனக்கு தெரியும் என்றால் சரி. அந்த இழப்பீட்டு தொகை அதிகம் என்று நான் மேல் முறையீடு செய்து அந்த நிலுவையில் உள்ளது என்றால் சரி. குழந்தை பிறந்தது முதல் எதிர்மனுதாரருடன் தான் இருந்து வருகிறான். ஒரு வயது வரை நான் போய் பார்த்தேன். குழந்தை தற்சமயம் என்னை பார்த்தால் நான் குழந்தையின் அப்பா என்று குழந்தைக்கு அடையாளம் தெரியாது என்றால் சரி. நான் குழந்தையை பார்க்கவேண்டுமென்று Visiting right கேட்டு எந்த நீதிமன்றத்திலும் மனுத்தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் இந்த ஐந்து வருட காலத்தில் தீபாவளி, பொங்கல், பிறந்த நாள் போன்ற விஷேச நாட்களில் குழந்தைக்கு துணி எதுவும் எடுத்துக்கொடுத்தேனா என்றால் இல்லை. என் குழந்தைக்கு உடல்ரீதியாக எதாவது பிரச்சனை உள்ளதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிறந்த சில நாட்களில் குழந்தைக்கு கண்ணில் பிரச்சனை வந்தது எனக்கு தெரியும் என்றால் சரி. அந்த பிரச்சனைக்கு இதுவரை சிகிச்சை எடுக்கப்படுகிறதா

சரியாகிவிட்டதா என்ற விவரம் தெரியுமா என்றால் சரியாகிவிட்டது என்று தெரியும். தொடர் சிகிச்சை எடுக்கப்படுகிறதா என்று தெரியாது. யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் உறவினர் மதுரை காந்திமதி மூலம் தெரிந்து கொண்டேன். என் தந்தை வழி சொத்துக்கள் அனைத்தையும் நான் தான் நிர்வகித்து வருகிறேன் என்றால் சரி. ஊட்டியில் என் அப்பாவிற்கு சொந்தமான, காம்ப்ளக்ஸ், விவசாய நிலங்கள், வீடு உள்ளது என்றால் சரி. என் அம்மா பெயரில் சொத்து எதுவும் இல்லை. என் அப்பா ஆவணம் எதுவும் ஏற்படுத்தாத வகையில் அந்த சொத்துக்களுக்கு நான் தான் வாரிசுதாரர் என்றால் சரியல்ல. எனக்கு அண்ணன், அக்கா இருக்கிறார்கள். அந்த சொத்துக்கள் என் அப்பாவுடைய சுயசம்பாத்திய சொத்துக்கள். என் அப்பாவின் தயவில்தான் என்னுடைய செலவுகள் என் மனைவிக்கு தேவையானவற்றை செய்து வந்தேன் என்றால் சரி. என் அப்பாவின் தயவில் வாழ்ந்துவருவதால் ஜீவனாம்சம் கொடுக்கமுடியாமல், இழப்பீடு கொடுக்க முடியாமல் இருந்து வருகிறேன் என்றால் சரி. என் அப்பா அம்மாவிற்கு உடல்நலம் சரியில்லாததால் இருவரும் கோயம்புத்தூரில் தங்கி மருத்துவம் பார்த்து வருகிறார்கள் என்றால் சரி. எனக்கு மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரர் உண்டு என்றாலும் அவரும் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் மனுவிற்காக ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டிற்கும் இந்த மனுவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சம்பந்தம் உண்டு. என்னாலயே என்னை பாதுகாத்துக்கொள்ள முடியாத சூழலில் இருப்பதால் குழந்தையை என் பொறுப்பில் ஒப்படைத்தால் குழந்தையை சரியாக பராமரிக்க முடியாது

என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு குழந்தையின் மீது அக்கறை இருந்தால் இதுநாள் வரை குழந்தையை பார்க்க முயற்சி செய்திருப்பேன் என்றாலும் குழந்தை மீது அக்கறை இல்லை என்றால் சரியல்ல. குழந்தை மீது அக்கறை உள்ளது. பொருளாதாரரீதியாகவும் குழந்தையை பராமரிக்க இயலாது என்றாலும் அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. குழந்தையை கஷ்டப்பட்டு நான் வளர்த்துக்கொள்வேன்.

Ramu Kumar

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/1/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

9/1/25